# 13

# அல்குர்ஆன் கூறும் நற்பண்புகள் - I

அல்குர்ஆன் மனிதருக்கு வழிகாட்டியாக அருளப்பட்ட அல்லாஹ்வின் வேத நூலாகும். இது தெளிவான அத்தாட்சிகளைக் கொண்ட சிறப்பு மிக்க நல்லுபதேசமுமாகும்.

அல்குர்ஆன் பல்வேறு போதனைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளது. அவற்றில் நற்குணமும், நல்லொழுக்கமும் அடங்கும். இங்கு நாம் ஸூரா அல - புர்கான், ஸூரா லுக்மான் ஆகிய அத்தியாயங்களில் கூறப்பட்டுள்ள அத்தகைய நற்பண்புகளைச் சுருக்கமாக நோக்குவோம்.

## 1. நல்லடியார்களின் பண்புகள்

### ஸூரதுல் புர்கான்

- அல்லாஹ்வை விசுவாசம் கொண்டு நற்காரியங்களில் ஈடுபடல்.

அல்லாஹ்வின் மீதான பூரண விசுவாசம் நற்பண்புகளுக்கு அத்திவாரமாக அமைந்துள்ளது. நற்பண்புகளுக்கு அல்லாஹ்விடம் நற்கூலி உண்டு. ஈமானும் நற்பண்பும் ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்பட்டவையாகும். நற்பண்புகள் ஈமானைப் பூரணப்படுத்துகின்றன.

- அல்லாஹ்வுடன் எவரையும் அழைக்காதிருத்தல்.

அல்லாஹ்வை மாத்திரமே வணங்கி அவனிடமே உதவி தேட வேண்டும். அவனுடன் வேறு எவரையும் அழைத்துப் பிரார்த்திக்கக் கூடாது. அல்லாஹ்வுடன் பிறரை இணையாக்குவதை 'ஷிர்க்' என்று சொல்லப்படும். இக்குற்றத்தை அல்லாஹ் மன்னிப்பதில்லை. எனவே, இவ்விடயத்தில் நாம் மிகவும் எச்சரிக்கை யாக நடந்து கொள்ள வேண்டும்.

وَعِبَادُ ٱلرَّحۡمَٰنِ ٱلَّذِينَ يَمۡشُونَ عَلَى ٱلۡأَرۡضِ
هَوۡنٗا وَإِذَا خَاطَبَهُمُ ٱلۡجَٰهِلُونَ قَالُواْ سَلَٰمٗا ﴿٦٣﴾ وَٱلَّذِينَ
يَبِيتُونَ لِرَبِّهِمۡ سُجَّدٗا وَقِيَٰمٗا ﴿٦٤﴾ وَٱلَّذِينَ يَقُولُونَ
رَبَّنَا ٱصۡرِفۡ عَنَّا عَذَابَ جَهَنَّمَۖ إِنَّ عَذَابَهَا كَانَ غَرَامًا
﴿٦٥﴾ إِنَّهَا سَآءَتۡ مُسۡتَقَرّٗا وَمُقَامٗا ﴿٦٦﴾ وَٱلَّذِينَ إِذَآ أَنفَقُواْ
لَمۡ يُسۡرِفُواْ وَلَمۡ يَقۡتُرُواْ وَكَانَ بَيۡنَ ذَٰلِكَ قَوَامٗا ﴿٦٧﴾
وَٱلَّذِينَ لَا يَدۡعُونَ مَعَ ٱللَّهِ إِلَٰهًا ءَاخَرَ وَلَا يَقۡتُلُونَ ٱلنَّفۡسَ
ٱلَّتِي حَرَّمَ ٱللَّهُ إِلَّا بِٱلۡحَقِّ وَلَا يَزۡنُونَۚ وَمَن يَفۡعَلۡ ذَٰلِكَ يَلۡقَ
أَثَامٗا ﴿٦٨﴾ يُضَٰعَفۡ لَهُ ٱلۡعَذَابُ يَوۡمَ ٱلۡقِيَٰمَةِ وَيَخۡلُدۡ فِيهِۦ
مُهَانًا ﴿٦٩﴾ إِلَّا مَن تَابَ وَءَامَنَ وَعَمِلَ عَمَلٗا صَٰلِحٗا
فَأُوْلَٰٓئِكَ يُبَدِّلُ ٱللَّهُ سَيِّـَٔاتِهِمۡ حَسَنَٰتٖۗ وَكَانَ ٱللَّهُ غَفُورٗا
رَّحِيمٗا ﴿٧٠﴾ وَمَن تَابَ وَعَمِلَ صَٰلِحٗا فَإِنَّهُۥ يَتُوبُ إِلَى ٱللَّهِ
مَتَابٗا ﴿٧١﴾ وَٱلَّذِينَ لَا يَشۡهَدُونَ ٱلزُّورَ وَإِذَا مَرُّواْ بِٱللَّغۡوِ
مَرُّواْ كِرَامٗا ﴿٧٢﴾ وَٱلَّذِينَ إِذَا ذُكِّرُواْ بِـَٔايَٰتِ رَبِّهِمۡ
لَمۡ يَخِرُّواْ عَلَيۡهَا صُمّٗا وَعُمۡيَانٗا ﴿٧٣﴾

- **பாவத்திலிருந்து விலகி நடத்தல்.**

மனிதர்கள் பாவம் செய்யக் கூடியவர்கள். ஆனால் நல்லடியார்கள் பாவத்தை உணர்ந்தவுடன் உடனடியாகப் பாவமன்னிப்புக் கோரி அதிலிருந்து விலகிவிடுவர். இதனைத் 'தௌபா' என்பர். இத்தகையோரை அல்லாஹ் மிக விரும்புகின்றான்.

- **இரவு வணக்கத்தில் ஈடுபடல்.**

கடமையான தொழுகைகளுக்கு மேலதிகமாக சுன்னத்தான இரவு நேரத்தொழுகைகளில் ஈடுபடுவது மிகச் சிறந்த நற்செயலாகும். இவை அல்லாஹ்வுடன் நெருக்கமான தொடர்பை ஏற்படுத்துகின்றன. பிந்திய இரவு நேரத்தில் பிரார்த்தனை புரிவதையும் பாவமன்னிப்புக் கோருவதையும் அல்லாஹ் ஏற்றுக் கொள்கின்றான்.

- **நரகிலிருந்து பாதுகாப்புத் தேடல்.**

நரக வேதனை மிகவும் கொடியது. இதனைவிட்டும் அல்லாஹ்வின் நல்லடியார்கள் எப்போதும் பாதுகாப்புத் தேடிக் கொண்டிருப்பர். நபி ஸ அவர்கள் நாளாந்தம் நரகின் வேதனையிலிருந்து பாதுகாப்புத் தேடியுள்ளார்கள்.

- **நடுநிலையாக நடந்து கொள்ளல்.**

ஒரு முஸ்லிம் எல்லா விடயங்களிலும் நடுநிலையாகவே நடந்து கொள்வார். செலவு செய்யும் விடயத்திலும் இம்முறையைக் கையாள்வார். எல்லை மீறி வீண்விரயம் செய்யவும் மாட்டார். உலோபித்தனம் காட்டவும் மாட்டார். உலோபித்தனத்தை அல்லாஹ் வெறுக்கின்றான். உலோபித்தனத்தையும் வீண்விரயத்தையும் ஷைத்தான் தூண்டுகின்றான்.

- **அல்குர்ஆனை விளங்கி அதன் வழி நடத்தல்.**

அல்குர்ஆன் அல்லாஹ்வுடைய வழிகாட்டலைக் கொண்ட புனித வேத நூலாகும். அதன் வசனங்கள் ஓதவும், விளங்கவும், அதன் வழி நடக்கவும் அருளப்பட்டவையாகும். நல்லடியார்கள் அதனை ஓதி விளங்கி அதன் வழியில் தமது வாழ்வை அமைத்துக் கொள்வார்கள். எந்நிலையிலும் அவற்றைப் புறக்கணிக்க மாட்டார்கள்.

- **கற்பொழுக்கம் பேணல்.**

ஒழுக்கத்தில் சிறந்தது கற்பொழுக்கமாகும். இது நல்லடியார்களின் சிறந்த பண்பாகும். எனவே கற்பொழுக்கத்துக்கு ஊறு விளைவிக்கும் துர் நடத்தைகளிலிருந்தும், அவற்றின் பக்கம் தூண்டக் கூடிய ஆபாசக் காட்சிகள், சினிமாக்கள் மற்றும் மோசமான சூழல்களிலிருந்தும் விலகிக் கொள்வார்கள்.

- **கொலையின் பக்கம் நெருங்காதிருத்தல்.**

கொலை மிகக் கொடிய பாவமாகும். இதன் மூலம் ஒரு மனிதனின் வாழ்வு முடிவடைகிறது; கொலை செய்யப்பட்டவரின் குடும்பத்தினர் அனாதரவாக்கப்

படுகின்றனர். இதனை அல்குர்ஆன் கடுமையாகக் கண்டிக்கின்றது. உயிரைக் கொடுப்பதும் எடுப்பதும் அல்லாஹ்வுக்குரிய பண்பாகும். அதனை நல்லடியார்கள் செய்ய மாட்டார்கள்.

- நம்பிக்கைக்குரியவராக வாழ்தல்.

ஒரு முஸ்லிம் எப்போதும் நாணயமாகவும் நம்பிக்கையாகவும் நடந்து கொள்வார். ஏமாற்றுதல், மோசடி செய்தல், பொய்ச்சாட்சி கூறல் போன்ற நம்பிக்கைக்குத் துரோகமான நடவடிக்கைகளில் ஈடுபடமாட்டார். இவை பாவங்களாகும். நயவஞ்சகர்களின் அடையாளமுமாகும்.

- கண்ணியமாக நடந்து கொள்ளல்.

தமது கண்ணியத்தையும் கௌரவத்தையும் பாதுகாத்து நடப்பது ஒவ்வொரு முஸ்லிமினதும் கடமையாகும். இவற்றுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் எந்தக் காரியத்தின் பக்கமும் நெருங்கக் கூடாது. மோசமான காரியம் நடக்கும் இடத்தின் பக்கம் தற்செயலாகச் சென்றுவிட்டாலும் கூட அதனை விட்டும் கண்ணியமான முறையில் அகன்று விட வேண்டும்.

- பணிவுடன் நடத்தல்.

பணிவாக நடப்பது முஸ்லிமின் முக்கிய பண்பாகும். நல்லடியார்கள் பெருமை, அகம்பாவம், மமதை, ஆணவம் போன்றவற்றிலிருந்து எப்போதும் தவிர்ந்து நடப்பர். பெருமையடிப்போரையும் ஆணவங் கொண்டு அலைவோரையும் அல்லாஹ் விரும்புவதில்லை. பெருமையடிப்பவரை அல்லாஹ் தாழ்த்திவிடுகின்றான். பணிவாக நடப்பவர்களை உயர்த்திவிடுகின்றான்.

- குதர்க்கம் புரிதலைத் தவிர்த்தல்.

குதர்க்கம் புரிவதென்பது உண்மைக்குப் புறம்பாகத் தர்க்கத்தில் ஈடுபடுவதைக் குறிக்கும். ஒரு விடயத்தை தர்க்கிக்க நேரிட்டாலும் கூட மிகக் கண்ணியமான முறையிலேயே தர்க்கிக்க வேண்டும். எம்முடன் அறிவில்லாதோர் விதண்டாவாதம் புரிந்தால் ‘ஸலாம்’ என்று கூறி ஒதுங்கிவிட வேண்டும்.

மேற்படி ஸூரதுல் புர்கான் கூறும் படிப்பினைகள், நல்லொழுக்கங்களை எமது வாழ்வில் எடுத்து நடந்து ஈருலகிலும் வெற்றி பெறுவோம்.

**செயற்பாடு:**

1. நாம் பேண வேண்டிய நல்லொழுக்கங்கங்களைப் பட்டியல் படுத்தி பிரிஸ்டல் அட்டையில் எழுதி வகுப்பறையில் தொங்க விடுக.
2. ஸூரதுல் புர்கானின் 63 முதல் 73 வரையிலான ஆயத்துக்களை மனனமிட்டு ஆசிரியரிடம் ஒப்புவிக்க.